**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 21.07.2025.**

| | |
|---|---|
| **Name : மதியழகன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) கந்தனூர் பகுதியில் எத்தனை ஆண்டு குடியிருந்தேன் என்றால் 5 வருடம் வாடகை வீட்டில் இருந்தேன். அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் பிரச்சனை செய்து வெளியேறி தற்போது உள்ள இடத்தில் வசிக்கிறேன் என்றால் அவ்வாறு இல்லை. தற்போதைய முகவரிக்கு வந்து சுமார் 5, 6 வருடம் இருக்கும். தற்போதுள்ளது சொந்த வீடாகும். எனக்கும் 1ம் எதிரி தங்கவேலுவுக்கும் நிலம் வாங்குவது சம்மந்தமாக கருத்து வேறுபாடு உள்ளது என்றால் இல்லை.

2) போதை கஞ்சா பழக்கத்திற்கு அடிமையாகி மனநலம் பாதிக்கப்பட்டு உள்ளதாக என் அண்ணன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சிவராஜ் சொல்கிறார் என்றால் சரியல்ல. எனக்கு சாருலதா என்ற ஒரே மகள். என் மகள் நான் சொல்வதை தான் கேட்பார் என்றால் சமுதாயத்தை பற்றி என் பெண்ணுக்கும் தெரியும்.

3) பேசுவதற்கு முன்பும் என்னை பார்த்து தான் பேசும் என்றால் அவ்வாறு இல்லை. என்னிடம் பயந்து கொண்டு தான் பேசும் என்றால் அவ்வாறு இல்லை. சம்பவம் நடப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் சீர் சம்பவம் நடந்தது என்றால் 2 மாதங்களுக்கு முன்னர் 1ம் எதிரியின் மகளுக்கு விழா நடந்தது.

அந்த விழாவிற்கு 1ம் எதிரி பத்திரிக்கை வைத்தார் என்றால் ஆமாம். பத்திரிக்கை வைக்க 1ம் எதிரி மட்டுமே வந்தார். 2ம் எதிரி வரவில்லை.

4) நாங்கள் சென்றோமா என்றால் என் மகள், என் இரண்டாம் மனைவி சென்றனர். விழாவிற்கு எத்தனை மணிக்கு சென்று வந்தார்கள் என்றால் காலை 10 மணிக்கு சென்றுவிட்டு மதியம் 1.30 மணிக்கு வந்தார்கள். விழா எத்தனை மணிக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது. விழா முடித்து வந்தார்களா என்றால் பாதியிலேயே வந்துவிட்டார்கள். எப்போது அது பற்றி எனக்கு தெரியும் என்றால் என் மனைவி இறந்து 10 நாட்கள் கழித்து என் மகள் சொல்லி தெரியும்.

5) என் வீட்டிற்கு இருபுறமும் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் ஆமாம். என் மகள் தங்கவேலுவின் பெண்ணுடன் தான் பள்ளிக்கு பேருந்துக்கு செல்வார் என்றால் அவ்வாறு இல்லை. அவர்கள் வீட்டை கடந்து தான் என் மகள் செல்வார் என்றால் ஆமாம்.

6) அந்த வீட்டு வழியாக செல்லும் போது கண்காணிப்பு கேமரா வழியாக பதிவு செய்யப்படும் என்றால் ஆமாம். எதிரி வகையறா பரம்பரை பரம்பரையாக நிலம் வைத்து விவசாயம் செய்து வருகிற விவரம் தெரியுமா என்றால் ஆமாம். தங்கவேலுவுக்கு மகன் ரித்விக் மற்றும் என் மகளை விட ஒரு வயது பெரியதாக உள்ள அநய்னா என்ற மகள் உள்ளார் என்றால் ஆமாம். தங்கவேலுவின் தாய் அவருடன் தான் வாழ்ந்து வருகிறார்.

7) எங்கள் வீட்டிலிருந்து முனுசாமி வீடு தங்கவேல் வீட்டை தாண்டி 60 அடி தொலைவில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் யார் யார் உள்ளார்கள் என்றால் என் மகள் மற்றும் 1ம் எதிரியின் மகள் உள்ளார். **புகைப்படம் எ.சா.1 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என் இரண்டாம் மனைவி குணவதி மற்றும் 2ம் எதிரி, அவரது மகள், என்னுடைய மகள் உள்ளார்கள். **புகைப்படம் எ.சா.2 ஆகும்.** என் மனைவி குணவதி 1ம் எதிரியின் மகளுக்கு நலுங்கு செய்யும் காட்சி காணப்படுகிறது. **புகைப்படம் எ.சா.3 ஆகும்.** அதிலுள்ள பெண் யார் என்றால் 1ம் எதிரியின் மகள் ஆவார். என்

மனைவி குணவதி தட்டம் வைத்துக் கொண்டு 1ம் எதிரியின் மகள் முன்பு நிற்கிறார். **புகைப்படம் எ.சா.4 ஆகும்.**

8) என்னிம் காட்டப்படும் மூன்று புகைப்படங்களும் தங்கவேலு வீட்டு முன்பாக எடுத்ததாக காணப்படுகிறது. அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. சேலத்திலிருந்து அதிகாரிகள் எத்தனை மணிக்கு வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் 01.02.2025ம் தேதி மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் மாலை 4 மணியளவில் விசாரித்தார்.

9) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் என்னை அடிக்க வந்த போட்டோ என்று சாட்சி ஏற்றுக் கொண்டார். இந்த புகைப்படம் யாரால் எடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதிகாரிகள் விசாரணைக்கு வந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் ஆமாம். **புகைப்படம் எ.சா.5 ஆகும்.** அலுவலர்கள் வந்த போது வீட்டின் முன்பு எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் ஆமாம். அதிகாரிகள் விசாரணைக்கு வந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் ஆமாம். **புகைப்படம் எ.சா.6 ஆகும்.**

10) மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர்கள் என் மகளையும், எதிரிகளையும், என்னையும் விசாரித்தார்களா என்றால் ஆமாம். யாரோ மூன்றாவது நபர் என்னுடன் ஒரு உறவினரான பெண்மணி இருந்தார் என்றால் என் மனைவி மாதேஷ்வரி ஆகும். ஆனால் அந்த பெண் மனைவி மாதேஷ்வரி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

11) என் மகளிடம் விசாரிக்கும் போது அவருடைய தாயார் டிசம்பர் 5ல் தற்கொலை செய்த நிலையில் உறவினர் பெண் ஒருவருடன் என் தந்தையுடன் சேர்ந்து பொட்டனேரியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு பயின்று வருகிறேன் என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். நான் கஞ்சா பழக்கம் உள்ளவர் என்பதால் என் மனைவி குணவதி மன வருத்தத்தில் இருப்பார் என்றால் அவ்வாறு இல்லை.

12) மனைவியை பிரிந்து 21 வருடம் ஆனது என்றால் ஆமாம். என் மனைவி மாதேஷ்வரி கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்து சென்றார் என்றால் ஆமாம்.

எங்களுக்குள் விவாகரத்து செய்தேனா என்றால் இல்லை. குணவதியை எவ்வாறு திருமணம் செய்தேன் என்றால் பதிவு திருமணம் செய்துள்ளேன். குழந்தை இல்லை என்பதால் நான் குணவதியை திருமணம் செய்தேன். நான் சட்டத்திற்கு விரோதமாக குணவதியை திருமணம் செய்தேன் என்றால் இல்லை.

13) மாதேஷ்வரியை எப்போது அழைத்து வந்தேன் என்றால் குணவதி இறந்து 10 நாட்கள் கழித்து மாதேஷ்வரியை அழைத்து வந்தேன். குணவதி இறப்பதற்கு முன்பே மாதேஷ்வரி வீட்டிற்கு சென்று வருவது வழக்கம் என்றால் இல்லை. நான் போதைக்கு அடிமையாவது மற்றும் மாதேஷ்வரி வீட்டிற்கு செல்வது தான் குணவதி இறந்ததற்கு காரணம் என்றால் இல்லை.

14) எத்தனை நாட்களுக்கு முன்னர் குணவதி அவரது அம்மா வீட்டிற்கு சென்றார் என்றால் தங்கவேலு தொந்தரவு செய்ததால் சென்றார். இறந்த அன்று தான் குணவதி அவரது அம்மா வீட்டிற்கு சென்றார். மருந்து தாரமங்கலத்தில் உள்ள அவரது அம்மா வீட்டில் குடித்துவிட்டார். இறந்த பின்னர் பிரேத பரிசோதனை செய்தார்களா என்றால் இல்லை. ஓமலூர் துளசி மருத்துவமனையில் என் மனைவி குணவதி இறந்தார்.

15) மருந்து குடித்த இடம் தாரமங்கலம். தகவல் தெரிந்து எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சேலம் அரசு மருத்துவமனைக்கு இறந்த அன்று இரவு 07.30 மணிக்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் உயிருடன் தான் இருந்தார். தங்கவேலு மிரட்டிய விவரம் தொடர்பாக போலீசார் குணவதியிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. புகார் ஏதேனும் அளித்தோமா என்றால் இல்லை.

16) உண்மையில் எதிரிகள் மிரட்டியிருந்தால் அந்த காரணத்தை வைத்து போலீசாரிடம் புகார் அளித்திருப்போம் என்றும் அவ்வாறு எதுவும் நடக்காததால் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தவறான நடத்தை காரணமாக குணவதி இறந்து போனதால் அதை மறைக்க வேண்டி பிரேத பரிசோதனை செய்யாமல் உடல் அடக்கம் செய்தோம் என்றால் சரியல்ல.

17) என் மூத்த மனைவி மாதேஷ்வரி என் இரண்டாவது மனைவி குணவதி இறப்பதற்கு முன்பே என் வீட்டிற்கு வந்ததால் மனம் உடைந்த குணவதி

இறப்பதற்கு ஒரு வாரம் முன்பு கோவித்து கொண்டு தன் தாய் வீட்டிற்கு சென்று இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. தங்கவேலுவின் மகளுக்கு சீர் செய்த புகைப்படத்தில் மகிழ்ச்சியாக தான் உள்ளார் என்றும் என் மகளிடம் தங்கவேல் தவறாக நடந்து கொண்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஒரு வருட காலமாக என் மகளிடம் 1ம் எதிரி தொந்தரவு கொடுத்து வருகிறார். என்னிடம் எந்த தகராறும் செய்யவில்லை. போலீசாரிடம் ஓர் ஆண்டு காலம் என் மனைவி மற்றும் மகளிடம் 1ம் எதிரி திருமணம் செய்ய கேட்டுக் கொண்டு வந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவி குணவதி என்னிடம் மறைத்துவிட்டார். என் மனைவி இறந்து 10 நாட்கள் கழித்து என் வீட்டில் வைத்து என் மகள் சொல்லி தான் தெரிந்து கொண்டேன். எந்த தேதியில் என் மகள் மேற்படி தொந்தரவு குறித்து சொன்னது எனக்கு தெரியாது. தெரிந்தபின்னர் புகார் அளித்தேனா என்றால் என் மகள் என்னிடம் தகவல் சொல்லி 10, 15 நாட்கள் கழித்து 04.01.2025ம் தேதி புகார் கொடுத்தேன்.

18) பள்ளிக்கு செல்லும் வழியில் தொந்தரவு கொடுத்த விஷயம், எந்த செல்போனில் இருந்து பேசி தொந்தரவு செய்தார்கள் என்பது குறித்து போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் ஆமாம். கடந்த 03.02.2025ம் தேதி மாவட்ட குழந்தை நல பாதுகாப்பு அலுவலர் அறிக்கை அளித்துள்ளார் என்றால் ஆமாம். நான் மிகைப்படுத்தி புகார் கொடுத்ததாக சொல்லி அந்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் ஆமாம்.

19) என் மனைவி குணவதி போலீசாரிடம் விசாரிக்கும் போது வயிற்று வலி அதிகமாக இருந்ததால் இறந்துபோய் விட்டார் என குணவதியின் அக்கா போலீசாரிடம் சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. நான் தவறான பழக்கத்திற்கு அடிமையானதால் என் மகள் என்னிடம் சிரமப்படுவதாக சொல்லி அவரை என்னிடமிருந்து பிரித்து குழந்தைகள் நல காப்பகத்தில் தங்கி அரசு செலவில் படிக்க வைப்பதாக என்னிடம் தெரிவித்ததை நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

20) சம்பவம் 24.01.2025 ம் தேதியன்று எங்களை அடித்ததாக என் மனைவி மாதேஷ்வரி சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் எதிரிகளிடம் நான் தகராறு செய்தேனா என்றால் இல்லை. சதாசிவம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் எதிரிகளை அடித்ததாக சாட்சி சதாசிவம் என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் எங்கு நடந்தது என்றால் தெரியாது. எங்கு சம்பவம் நடந்தது என்றால் சுவற்றின் அருகில் நடந்தது.

21) நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும்போது எதிரிகள் அங்கு இருந்தார்கள் என்றால் இரண்டுபேரும் ஒரே நேரத்தில் சென்றோம். எனது வீட்டை சுற்றி பழனி ரோஸ்கார்டன் சிலம்பரசன், ஆண்டியப்பன் நிலம் ஆகியவை உள்ளது என்றால் உள்ளது. மேற்சொன்ன நபர்கள் மாவட்ட அலுவலர்கள் விசாரிக்கும்போது என் மீது தவறு உள்ளதாக சொன்னால் என்றால் யாரையும் விசாரிக்கவில்லை. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்றால் ஆமாம். என்னை அடிக்க பயன்படுத்திய ஆயுதத்தை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

22) எனக்கு வெளிப்புற காயம் இல்லை என்றால் இருந்தது. மருத்துவரிடம் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரி என் மீது கொடுத்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். நான் யாரையும் அடிக்கவில்லை. மருத்துவரிடம் வீட்டுக்குள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு தோள்பட்டை, கால் முட்டி மட்டுமே காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு இல்லை, நிறைய காயம் ஏற்பட்டது. எனது மகளுக்கு காயமே இல்லை என்றும், அடித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுவற்று அருகே எதிரியும், நானும் என்ன பேசிக்கொண்டிருந்தோம் என்றால் பேசவே இல்லை.

23) எனது மனைவி மாதேஸ்வரிக்கு காயம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சம்பவத்தன்று எங்கு சென்று வந்தார் எனக்கு தெரியாது. எனக்கும், எதிரிகளுக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்றால்

சரியல்ல. மாவட்ட அலுவலர்கள் விசாரித்த அன்று மாலை 4 மணி வரை எந்த பிரச்சனையும் இல்லை என்றால் ஆமாம்.

24) எனது மகளை எதிரி குடும்பத்தார் தாய் இல்லாத நிலையில் பார்த்துக்கொள்ள சொன்னோம் என்றால் இல்லை. நியாயம் கேட்க வந்தவர்களை நான் அடித்துவிட்டு பொய்யாக எதிரி அடித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.